இலங்கை மின்சார சபை

புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திக் கிளை

# பதவி வெற்றிடம்

## சுற்றுச்சூழல் நிபுணர்

### 2 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள், அனுபவம் மற்றும் தொழில்முறை திறன்களைக் கொண்ட இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலும், மின் துறை அல்லது பிற தொழில்துறை கட்டுமானத் திட்டங்களில் சுற்றுச்சூழல் மேலாண்மையில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**தகுதிகள் :**

- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து இளங்கலை பட்டம் அல்லது அதற்கு சமமானதாக அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தகுதி.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து சுற்றுச்சூழல் அறிவியல், சுற்றுச்சூழல் மேலாண்மை அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**அனுபவம் :**

- சுற்றுச்சூழல் / சமூகப் பாதுகாப்பு துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம், குறிப்பாக சாலைகள், மின் மேம்பாட்டுத் திட்டங்கள், துணை மின்நிலையங்கள் மற்றும் உயர் மின்னழுத்த மின்மாற்ற வலையமைப்பு ஆகியவற்றின் கட்டுமானத்தில் அனுபவம்
- சாலை மற்றும் மின்சாரத் துறை திட்டங்களுக்கு காணி கையகப்படுத்துதலில் அனுபவம் இருப்பின் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

**வயது:**

- 45 வயதிற்கு கீழ்ப்பட்டவராக இருக்க வேண்டும்.

**தொழில்முறை திறன்கள்:**

- திட்டத்தின் சுற்றுச்சூழல் தொடர்பான செயற்பாடுகளை எதிர்பார்க்கப்படும் சிறப்புத் துறையில் சுயாதீனமாகக் கையாளும் திறன்.
- மற்ற குழு உறுப்பினர்களின் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் வகையில் ஒரு குழுவில் திறம்பட செயற்படும் திறன்.
- விண்ணப்பதாரரின் துறையில் சுற்றுச்சூழல் செயற்படுத்தலில் உள்ள சிக்கல்களை பகுப்பாய்வு செய்து தீர்க்கும் திறன்.
- தேசிய காணி கையகப்படுத்தல் சட்டங்கள், மீள்குடியேற்றக் கொள்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் / சமூகப் பாதுகாப்புகள் பற்றிய போதிய அறிவு.
- நில உரிமையாளர்கள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் சமூக மட்ட உறுப்பினர்களை கையாள்வதில் வலுவான தனிப்பட்ட திறன்கள்.
- கணினி அறிவு.
- ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் புலமை.

**இறுதித் திகதி:** 22.05.2025

- **தேர்வு முறை :** நேர்முகத்தேர்வு மூலம். (குறுகிய பட்டியல்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்)

**சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

- நியமனம் 02 வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் இருக்கும்
- விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தில் உள்ள திட்ட பிரதேசங்களில் நீண்ட நேரம் பணியாற்ற கூடியவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம் :**

- CEB சம்பள அமைப்பின் S3 பிரிவின் ஆரம்ப சம்பளம்.

**இதர சலுகைகள்:**

- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) தகுதியுடையவராக இருப்பார், இதில் ஊழியர்களின் பங்களிப்பு 10% மற்றும் தொழில் வழங்குநரின் பங்களிப்பு 15% ஆகும்.
- ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) தொழில் வழங்குநரின் பங்களிப்பு 3% ஆகும்.

முழுப்பெயர், தனிப்பட்ட மற்றும் அலுவலக முகவரிகள், தொடர்பு எண்கள், இரண்டு உறவினர்கள் அல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்கள், மற்றும் முழுமையான சுயவிபரக்கோவையுடன் (ஆங்கில மொழியில் நிரப்பப்பட்டது) இடது பக்க மேல் மூலையில் **"சுற்றுச்சூழல் நிபுணர் பதவி - புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திக் கிளை"** என்று குறிப்பிட்டு, இறுதித் திகதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியை அடையும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

பொது சேவை / பொது நிறுவனங்களில் ஏற்கனவே உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் துறைத் தலைவர் மூலம் தங்கள் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும், மேலும் இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் விண்ணப்பதாரர் விடுவிக்கப்படுவாரா என்பது இதில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**மேலும் தகவலுக்கு :**

**பிரதி பொது முகாமையாளர் (RED)**
**தொலைபேசி எண்: 0112889640**
**தொலைநகல் எண்: 0112869631**

**முகவரி :**

**பிரதி பொது முகாமையாளர்**
**(புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்திக் கிளை)**
**இலங்கை மின்சார சபை,**
**இல. 949/A/1, டி.சி. கார்டன் வீதி,**
**பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்லை.**

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

tamilguru.lk